## தமிழ்நாடு அரசின் கோரிக்கையை ஏற்று,

# ‘கலைஞர் நினைவு நாணயம்’ வெளியிட ஒன்றிய அரசு அனுமதி!

புதுடெல்லி,ஜூலை.11-

தமிழ்நாடு அரசின் கோரிக்கையை ஏற்று, கலைஞர் நினைவு நாணயம் வெளியிட ஒன்றிய அரசு அனுமதி வழங்கியது. ‘முத்தமிழ் அறிஞர் கலைஞர் டாக்டர் எம்.கருணாநிதி’ என்ற பெயரில் ஒரு நினைவு நாணயம் வெளியிட தமிழ்நாடு அரசு திட்டமிட்டது. இதற்காக, ரூ.100 மதிப்பில் நினைவு நாணயம்வெளியிடும்படி மத்திய நிதியமைச்சகத்திடம் முதல்வர் மு.க.ஸ்டாலின் அரசு சார்பில் கடந்த வருடம் கோரப்பட்டிருந்தது.

இந்நாணயத்தை, கடந்த ஜூன் 3ல் முடிந்த கலைஞர் அவர்களின் நூறாவது பிறந்தநாளில் வெளியிடத் திட்டமிடப்பட்டிருந்தது. பல்வேறு காரணங்களால் இந்த நாணயம் குறிப்பிட்ட தேதியில் வெளியிட முடியாமல் இருந்தது. இதன் பின்னணியில் நாணயத்திற்கான நடைமுறைகள் முடிவடையாதது காரணமானது. தற்போது இவை அனைத்தும் முடிந்து நேற்று நாணயத்திற்கான அனுமதியில் ஒன்றிய நிதி அமைச்சர் நிர்மலா சீதாராமன் கையொப்பம் இட்டதாகத் தெரிகிறது.



தமிழ்நாடு அரசின் கோரிக்கையை ஏற்று, முன்னாள் முதலமைச்சர் ‘முத்தமிழ் அறிஞர் கலைஞர்’ டாக்டர் மு.கருணாநிதி என்ற பெயரில் நினைவு நாணயம் வெளியிட ஒன்றிய அரசு அனுமதி வழங்கியுள்ளது. ஆங்கிலம் மற்றும் இந்தியில் அவரின் பெயருடன் ‘தமிழ் வெல்லும்’ என்ற வாசகம் இடம் பெற உள்ளது. இதற்கான உத்தரவு விரைவில் ஒன்றிய அரசின் கெஜட்டில் வெளியாக உள்ளது. இதற்கான மாதிரி வடிவத்தை தமிழ்நாடு அரசு வழங்கியுள்ளது.



இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் பி.கே. சேகர்பாபு நேற்று (10.07.2024) சென்னை, வியாசர்பாடி, இரவீஸ்வரர் திருக்கோயிலில் ரூ. 1.98 கோடி மதிப்பீட்டிலான திருப்பணிகளை தொடங்கி வைத்தார். உடன் பெரம்பூர் சட்டமன்ற உறுப்பினர் ஆர்.டி.சேகர், மாநகராட்சி மன்ற உறுப்பினர்கள் மற்றும் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.




தலைமைச் செயலகத்தில், நேற்று (10.07.2024) தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத் துறை அமைச்சர் முனைவர் டி.ஆர்.பி. ராஜா தலைமையில், உலக முதலீட்டாளர்கள் மாநாடு 2024–ல் ஈர்க்கப்பட்ட புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் மற்றும் முதலீடுகளின் முன்னேற்றம் குறித்து கண்காணிக்க அமைக்கப்பட்ட சிறப்புக் குழுவின் கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தில், தலைமைச் செயலாளர் சிவ்தாஸ் மீனா, கூடுதல் தலைமைச் செயலாளர்/முதலமைச்சரின் செயலாளர் நா. முருகானந்தம், நிதித்துறை முதன்மைச் செயலாளர் த.உதயச்சந்திரன், தொழில் துறை செயலாளர் வி.அருண் ராய், அரசு செயலாளர்கள் மற்றும் உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

### நே.சிற்றரசு தலைமை! நா.எழிலன் எம்.எல்.ஏ. முன்னிலை! ஆயிரம் விளக்கு -118வது வட்டம்

# எம்.காசி இல்ல மணவிழா வரவேற்பு! அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் வாழ்த்துரை!

### மு.க.தமிழரசு - தயாநிதி மாறன் எம்.பி. - அன்பகம் கலை - மா.பா.அன்புதுரை- கோ.யுவராஜ் பங்கேற்பு!

சென்னை, ஜூலை. 11

முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் நல்லாசியுடன், கழகத் தலைவர் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் நல்வாழ்த்துக்களுடன், சென்னை மேற்கு மாவட்டம், ஆயிரம் விளக்கு கிழக்குப் பகுதி, 118 வது வட்டக் கழக துணைச் செயலாளர் எம்.காசி கா.மீனாட்சி காசி ஆகியோரின் புதல்வர் கே.சதாசிவம் காஞ்சிபுரம் மாவட்டம், எம்.ஏழுமலை இ.ஆனந்தி ஆகியோரின் புதல்வி இ.ஜான்சிராணிக்கும் திருமண வரவேற்பு விழா இன்று (11.7.2024 வியாழக்கிழமை) மாலை 6.30 மணியளவில், சென்னை, லாயிட்ஸ் சாலையில் உள்ள நல்வாழ்வு திருமண மண்டபத்தில் நடைபெறுகிறது.

இவ்விழாவில் சென்னை மேற்கு மாவட்டக் கழகச் செயலாளர் நே.சிற்றரசு எம்.சி. தலைமை வகிக்கிறார்.

ஆயிரம் விளக்கு சட்டமன்ற உறுப்பினர் நா.எழிலன் நாகநாதன், அன்பகம் செந்தில் ஆகியோர் முன்னிலை வகிக்கிறார்.

ஆயிரம் விளக்கு கிழக்குப் பகுதிக் கழகச் செயலாளர் மா.பா.அன்புதுரை, 118 வது வட்டக் கழகச் செயலாளர் கோ.யுவராஜ் ஆகியோர் வரவேற்புரை ஆற்றுகின்றனர்.

இவ்வாறு விழாவில் மு.க.தமிழரசு, தயாநிதி மாறன் எம்.பி, அன்பகம் கலை, எம்.கே.மோகன் எம்.எல்.ஏ, மருத்துவர் கலை கதிரவன், எஸ்.மோகன், ந.இராமலிங்கம், எஸ்.மதன்மோகன், ஏ.ஆர்.பி.எம்.காமராஜ், வினோத் வேலாயுதம், நுங்கை வி.எஸ்.ராஜ், ச.பரமசிவம், வி.என்.ராஜன், நந்தனம் கி.மதி, எஸ்.முரளி மற்றும் மாவட்டக் கழக நிர்வாகிகள், தலைமை செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், பகுதிக் கழகச் செயலாளர்கள், வட்டக் கழகச் செயலாளர்கள், அனைத்து அணிகளின் அமைப்பாளர்கள் மற்றும் துணை அமைப்பாளர்கள், கழக முன்னோடிகள் பலர் கலந்து கொண்டு மணமக்களை வாழ்த்துகின்றனர்.

